**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**DVC No.02/2025**
**மனுதாரர் தரப்பு சாட்சி:**

| | |
|---|---|
| பெயர்: கோமதி (ம.சா.1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் வி.நிவேதா அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**ம.சா.1 முதல் விசாரணை:–**

ம.சா.1 ஆகிய நான் இந்த வழக்கில் மேற்படி மனுவின் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

1. 17.06.2025ம் தேதியிட்ட குடும்ப நிகழ்வு அறிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகவும்,

2. 13.05.2025ம் தேதியிட்ட மனுதாரரின் விளக்க கடிதம் அசல் ம.சா.ஆ.2 ஆகவும்,

3. மனுதாரரின் குடும்ப புகைப்படம் அசல் ம.சா.ஆ.3 ஆகவும்,

4. 14.05.2025ம் தேதியிட்ட மனுதாரர் பாதுகாப்பு அலுவலருக்கு கொடுத்த புகார் மனு நகல் ம.சா.ஆ.4 ஆகவும்,

5. 29.05.2025ம் தேதியிட்ட மனுதாரர் பாதுகாப்பு அலுவலர் முன்னிலையில் எழுதிக்கொடுத்த கடிதம் அசல் ம.சா.ஆ.5 ஆகவும்,

6. 29.05.2025ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் பாதுகாப்பு அலுவலர் முன்னிலையில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 09:02:13 +0530

எழுதிக்கொடுத்த கடிதம் அசல் ம.சா.ஆ.6 ஆகவும்,

7. 09.06.2025ம் தேதியிட்ட மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இரண்டாம் விசாரணையில் எழுதிக்கொடுத்த கடிதம் அசல் ம.சா.ஆ.7 ஆகவும்,

8. 17.06.2025ம் தேதியிட்ட மனுதாரர், எதிர்மனுதாரர் மீது மேல்நடவடிக்கை எடுக்குமாறு எழுதிக்கொடுத்த கடிதம் அசல் ம.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்துகொண்டு மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.10 09:02:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.